ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1751/30 - 2012 මාර්තු 30 වැනි සිකුරාදා - 2012.03.30

*1751/30 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### மதுவரிக் கட்டளைச் சட்டம்

*மதுவரி அறிவித்தல் இல. 951*

***மருந்துப்பொருள் உற்பத்தித் தயாரிப்புகளுக்காகவும் மற்றும் பிற பாவனைக்காகவும் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்கள் பயன்படுத்தப்படும் மதுசாரம் (ஈதைல் அற்ககோல்) மீதான தீர்வை வரி***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும், காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம் ) 22 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி,*
*நிதி, திட்டமிடல் அமைச்சர்.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2012, மாச்சு 30.*

*கட்டளை*

*1. இதனகத்துக்குப் பின்னர் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் நிரல் I இல் குறிப்பீடு செய்யப்பட்ட பொருட்கள் மீதான தீர்வை, அவ்வட்டவணையின நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட விகிதத்தில் 2012, மாச்சு 30 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப்பெறும் வகையில் விதிக்கப்படுதல் வேண்டும்.*

*2. ஏதேனும் பிற அறிவித்தல்களுக்கு எதுவும் முரண்படாத வகையில் அத்தகைய மதுசாரம் (ஈதைல் அற்ககோல்) இறக்குமதி செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது வடிசாலையிலிருந்து, மொத்த களஞ்சியசாலையிலிருந்து உள்ளூர் உற்பத்திசாலையிலிருந்து விடுவிக்கப்படும் போது இத் தீர்வைகள் செலுத்தப்படுதல் வேண்டும்.*

*3. 2011, நவெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 1733/3 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மதுவரி அறிவித்தல் இல. 945 இரத்துச் செய்யப்படுகிறது.*

*அட்டவணை*

| | நிரல் I<br>பொருட்கள் | நிரல் II<br>தீர்வை விகிதம் |
|---|---|---|
| 1. | அரசாங்க திணைக்களங்கள், வைத்தியசாலைகள், அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங்களினால் அல்லது வேறுவகையில் மதுவரி செலுத்தப்பட வேண்டிய உரிமம் பெற்ற குடிபான மதுபான தயாரிப்பாளர்களினால் பயன்படுத்தப்படும் மதுசாரம் (ஈதைல் அற்கோல்). | இல்லை |
| 2. | மதுசாரம் உள்ளடங்கிய மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்வதுடன், கைத்தொழிலுக்காகப் பயன்படுத்தப்படும் மற்றும் முடிவுப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் மூலம் பயன்படுத்தப்படுகின்ற மதுசாரம் (ஈதைல் அற்ககோல்) பொருட்டு பின்வரும் வரையறைகளின்படி- | |
| | (i) மாதமொன்றுக்கு லீற்றர் 10,000 வரை | தொகை லீற்றர் ஒன்றுக்கு முன்நூற்றுப் பத்து ரூபா (310 ரூபா ) |
| | (ii) மாதமொன்றுக்கு 10,001 முதல் 20,000 லீற்றர் வரை | தொகை லீற்றர் ஒன்றுக்கு நாநூற்றுப் பத்து ரூபா (410 ரூபா) |
| | (iii) மாதமொன்றுக்கு 20,000 லீற்றரை விஞ்சும் போது | தொகை லீற்றர் ஒன்றுக்கு அறுநூற்று அறுபது ரூபா (660 ரூபா) |
| | (மீள் வடிப்புக்காக பயன்படுத்தப்படுகின்ற ஸ்பிரித்துகளைப் பொறுத்தவரையிலும் இந்நிபந்தனை ஏற்புடையதாதல் வேண்டும்), ஆயினும், இங்கு (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைக்குள் மற்றும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்திற்காக ஸ்பிரித்து இறக்குமதி செய்யப்படுமாயின், இந்த தீர்வை ஏற்புடையதாகமாட்டாது. | |
| 3. | சுத்திகரிக்கப்படாத ஈதைல் அற்ககோல் மதுசார வகைகள் (தொழில் நுட்ப மதுசாரம் /பலம் குறைந்த மதுசாரம்). | தொகை லீற்றர் ஒன்று நூற்றி ஐம்பது ரூபா (150 ரூபா) |

*04- 418*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.